# NSW HEALTH

## COVID-19 Key Points - Tuesday 3 August 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 199 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றுக்கள் நியூ சவுத் வேல்ஸ்-ல் பதிவாகியுள்ளன.
- இந்த உள்ளூர் நோய்த்தொற்றுக்களில், 88 நோய்த்தொற்றுக்கள் ஏற்கனவே அறியப்பட்ட ஒரு நோய்த்தொற்றாளர் அல்லது ஒரு நோய்த்தொற்றுக் குழுவுடன் தொடர்புபட்டுள்ளன - நோய்த்தொற்றுள்ளவர்களில் 67 பேர் வீட்டுத் தொடர்புகள், அத்துடன் 21 பேர் நெருங்கிய தொடர்புகள் - மேலும் 111 நோய்த்தொற்றுக்கள் எங்கிருந்து ஆரம்பித்தன என்பது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.
- குறைந்தது 50 நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் தொற்றுவிளைவிக்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர்.
- மற்றவர்களின் வீடுகளுக்கு நீங்கள் விருந்தினர்களாகச் செல்லவோ அல்லது உங்கள் வீட்டிற்கு மற்றவர்கள் விருந்தினர்களாக வரவோ கூடாது என்பதை நாங்கள் சமூகத்திற்கு நினைவூட்டுகிறோம். உங்களுடன் வழமையாக வசிக்காத உங்கள் குடும்பமும் இதில் அடங்கும்.
- உங்களால் தவிர்க்க முடிந்தால், தயவுசெய்து பாதிப்புக்குள்ளான எட்டு உள்ளூர் அரசாங்கப் பகுதிகளில் (LGA - எல்.ஜி.ஏ) உள்ள கடைகளில் பொருட்கள் வாங்குவதற்காகச் செல்ல வேண்டாம். இது, அருகாமையில் உள்ள பிற உள்ளூர் அரசாங்கப் பகுதிகளுக்கு நோய்த்தொற்று பரவும் அபாயத்தைக் குறைக்க உதவும்.
- தீவிர சிகிச்சைப் பிரிவில் (ஐ.சி.யு - ICU) உள்ள 53 பேரில், 43 பேருக்கு தடுப்பூசி போடப்படவில்லை, அத்துடன் எவருமே இரண்டு தடுப்பூசி வகைகளில் ஏதேனும் ஒன்றின், இரண்டு மருந்தளவுகளையும் (டோஸ்) பெற்றிருக்கவில்லை.
- கடுமையான நோய் மற்றும் மரணத்திற்கு எதிராக, 90%-க்கும் அதிகமான பாதுகாப்பை தடுப்பூசி வழங்குகிறது.
- ஆகஸ்ட் மாதத்தை, நியூ சவுத் வேல்ஸ்-ல் உள்ள அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் மாதமாக நாம் மாற்ற வேண்டும்!
- ஒரு பொது மருத்துவர் (ஜி.பி.), pharmacy (மருந்தகம்), new walk-in clinic (புதிய நேரடியாகச் செல்லக்கூடிய (வாக்-இன்) மருத்துவ நிலையம்), அல்லது நியூ சவுத் வேல்ஸ் சுகாதார நிலையம் (NSW Health clinic) ஆகியவற்றில் நீங்கள் ஒரு தடுப்பூசியைப் பெறலாம்.
- இன்றே உங்களது தடுப்பூசியைப் பெறுவது எப்படி என்று அறிய, nsw.gov.au ஐப் பார்வையிடுங்கள்.

Translated By WSLHD Translation Service, 3 August 2021
Tamil